பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
29 10 2024 7 15
செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, சுகாதாரத் துறை சார்ந்த, 12 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. சர்தார் வல்லபாய் பட்டேல் பிறந்தநாளை முன்னிட்டு நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை ஓட்டம் இன்று நடைபெறுகிறது.

3. மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

4. மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல், இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று சவுதி அரேபியா புறப்பட்டுச் செல்கிறார்.

5. ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டி, ஜெர்மனியில் இன்று தொடங்குகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் 12 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான சுகாதாரத் துறை தொடர்பான பல்வேறு திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மக்கள் ஆரோக்கிய திட்டத்தின் கீழ் 70 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் சுகாதாரக் காப்பீட்டை விரிவுபடுத்தும் திட்டத்தை பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

வருமானத்தைப் பொருட்படுத்தாமல் 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் அனைவருக்கும் இத்திட்டம் சுகாதாரப் பாதுகாப்பை வழங்கும்.

பஞ்சகர்மா மருத்துவமனை, மருந்து உற்பத்திப் பிரிவு, விளையாட்டு மருத்துவப் பிரிவு உள்ளிட்டவற்றைக் கொண்ட அகில இந்திய ஆயுர்வேத நிறுவனத்தின் இரண்டாம் கட்டத் திட்டத்தை அவர் தொடங்கி வைக்கிறார்.

மத்தியப்பிரதேசத்தில் உள்ள மண்ட்சவுர், நீமுச், சியோனி ஆகிய இடங்களில் மூன்று மருத்துவக் கல்லூரிகளையும் பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

ஹிமாச்சலப் பிரதேசம், மேற்கு வங்கம், பீகார், உத்தரப் பிரதேசம், அசாம், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், கர்நாடகா, மணிப்பூர், தமிழ்நாடு, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பல்வேறு மருத்துவக் கட்டமைப்புகளை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

மத்தியப்பிரதேசம், ஹரியானா, ஆந்திர மாநிலங்களில் பல்வேறு இடங்களில் ஈஎஸ்ஐசி மருத்துவமனைகளுக்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் மத்திய மருந்து பரிசோதனை ஆய்வகத்தையும் திரு நரேந்திர மோடி திறந்து வைக்கவுள்ளார்.

<<<<>>>>

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் தேசிய ஒற்றுமை ஓட்டம் இன்று நடைபெறுகிறது.

இதனையொட்டி பல்வேறு இடங்களில் ஒற்றுமை ஓட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் இன்னும் சற்றுநேரத்தில் இந்த ஓட்டத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவும், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியாவும் கொடியசைத்து தொடங்கி வைக்க உள்ளனர்.

நாடு முழுவதும் நடைபெற உள்ள ஒற்றுமை ஓட்டங்களில் மக்கள் திரளாக பங்கேற்க வேண்டும் என நேற்று முன்தினம் பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது மன் கி பாத் வானொலி உரையில் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெற்று வரும் ராணுவ தளவாட உற்பத்தி தொடர்பான கண்காட்சி மற்றும் கருத்தரங்கில், பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று உரையாற்றுகிறார்.

இந்த இரண்டு நாள் கண்காட்சியை ராணுவ தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி தொடங்கி வைத்தார்.

பாதுகாப்புத்துறை உற்பத்தியில் சுயசார்பை வலுப்படுத்தும் வகையில் நடத்தப்படும் இந்தக் கண்காட்சியில், புதுமையான தொழில்நுட்பங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

<<<<>>>>

உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக கப்பல் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

அசாமில் பிரம்மபுத்திரா நதிக்கரையில் பாண்டு நிதித் துறைமுகத்தில் மேம்பாட்டுப் பணிகள் குறித்து நேற்று அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பிரம்மபுத்திரா நதிக் கரைப் பகுதியில், 645 கோடி ரூபாய் மதிப்பில் 10 முக்கிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக திரு சர்பானந்த சோனோவால் கூறினார்.

<<<<>>>>

இந்தியா அனைத்துத் துறைகளிலும் வேகமாக வளர்ந்து வருவதாக மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திரப் பிரதான் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் உள்ள இந்திய தொழில்நுட்பக் நிறுவத்தின் 13-வது பட்டமளிப்பு விழாவில் நேற்று அவர் உரையாற்றினார்.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களுக்கு முக்கிய பங்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வலுவான தேசத்தைக் கட்டமைக்கும் பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளது என்று அவர் கூறினார்.

<<<<>>>>

தீபாவளிக் கொண்டாட்டங்களின்போது தூய்மையை கடைபிடிக்க வேண்டும் என்று மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மனோகர் லால் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தூய்மை தீபாவளி இயக்கத்தை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இந்த இயக்கம் நவம்பர் 3ஆம் தேதி வரை நடைபெறும் என்று அவர் கூறினார்.

பண்டிகைக் காலத்தின்போது சாலைகள், தெருக்கள் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளில் தூய்மையை பராமரிக்க இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

பிரத்யேக உயிரி தொழில்நுட்பக் கொள்கையை அமல்படுத்திய சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக திகழ்கிறது என மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மொஹாலியில் உயிரி உற்பத்தி நிலையத்தின் புதிய வளாகத்தை நேற்று அவர் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், உயிரி தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயத்தில் புதுமைகளை ஊக்குவித்தல், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஏற்படுத்துதல் போன்றவற்றுக்கு அரசு முன்னுரிமை அளிப்பதாக கூறினார்.

<<<<>>>>

மத்திய வர்த்தக அமைச்சர் திரு பியூஷ் கோயல் இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக இன்று சவுதி அரேபியாவுக்குப் புறப்பட்டுச் செல்கிறார்.

இந்தப் பயணத்தின்போது வர்த்தகம், முதலீடு ஆகியவற்றில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து அந்நாட்டு அமைச்சர்களுடன் அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

ரியாத்தில் நடைபெறும் முதலீட்டாளர்கள் சந்திப்பிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.

டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், விவசாயம், உணவுப் பாதுகாப்பு, எரிசக்தி, உள்கட்டமைப்பு போன்ற துறைகளில் இரு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட, அமைச்சர்கள் நிலையிலான கூட்டத்திலும் திரு பியூஷ் கோயல் பங்கேற்கவுள்ளார்.

ரியாதில் உள்ள இந்திய தூதரகத்தில் “ஒரு மாவட்டம், ஒரு உற்பத்திப் பொருள்” விற்பனை மையத்தையும் அவர் திறந்து வைக்கவுள்ளார்.

<<<<>>>>

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் மற்றும் ஜார்க்கண்ட் இரண்டாம் கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் இன்றுடன் நிறைவடைகிறது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறுகிறது.

மகாராஷ்டிராவில் வேட்புமனுக்களை திரும்பப் பெற நவம்பர் 4ஆம் தேதியும், ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கு இரண்டாம்கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் மனுக்களை திரும்பப் பெற நவம்பர் ஒன்றாம் தேதியும் கடைசி நாளாகும்.

மகாராஷ்டிராவில் மொத்தமுள்ள 288 தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக நவம்பர் 20ஆம் தேதி தேர்தல் நடைபெறுகிறது.

ஜார்கண்ட்டில் இரண்டாம் கட்டமாக 38 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 20ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதனிடையே மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. ஏக்நாத் ஷிண்டே, துணை முதலமைச்சர் திரு. அஜித் பவார், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. விஜய் வடேடிவார், மகாராஷ்டிரா நவ்நிர்மான் சேனா தலைவர் திரு. ராஜ்தாக்கரே உள்ளிட்டோர் நேற்று வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

ஜார்கண்ட்டில் 38 தொகுதிகளுக்கு நேற்று வரை 632 வேட்பாளர்கள் மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

மாநிலத்தில் வாகன சோதனையின்போது ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 86 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஒடிசாவில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, முதலமைச்சர் திரு மோகன் சரண் நேற்று இரண்டாவது முறையாக ஆய்வு செய்தார்.

டானா புயலின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொண்ட பின் பத்ரக் மாவட்டத்தின் சந்திபூரில் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

கேந்திரபாரா, பத்ரக், பாலசோர் மாவட்டங்களில் உள்ள சில கிராமங்களில் மழைநீர் வடியவில்லை என அவர் தெரிவித்தார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 30 ஆயிரம் பேர் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 98 சதவீத இடங்களில் மின் விநியோகம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளதாக அவர் கூறினார்.

2 லட்சத்து 21 ஆயிரம் ஏக்கர் நிலங்களில் பயிரிடப்பட்ட பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு மோகன் சரண் மாஜி தெரிவித்தார்.

<<<<>>>>

காசா பகுதியில் ஒரு குறுகிய கால போர் நிறுத்தத்தை அமல்படுத்த வேண்டும் என்ற எகிப்து அதிபர் அப்தெல் ஃபத்தா எல் சிசியின் கோரிக்கையை இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு நிராகரித்துள்ளார்.

கெய்ரோவில் அல்ஜீரிய அதிபர் அப்தெல்மஜித் தெபூனுடன் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, கைதிகளை பரிமாற்றம் செய்வதற்கு வசதியாக இரண்டு நாள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ளலாம் என எகிப்து அதிபர் கூறியிருந்தார்.

<<<<>>>>

ஹைலோ ஓபன் பேட்மிண்டன் போட்டி, ஜெர்மனியில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா சார்பில் சதீஷ்குமார் கருணாகரன், மாளவிகா பன்சோத், ஆயுஷ் ஷெட்டி, சங்கர் முத்துசாமி சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

ஆசிய சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில் பங்கேற்கும் இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Salima** அணியின் கேப்டனாகவும், நவ்னீத் கவுர் துணை கேப்டனாகவும் செயல்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி அடுத்த மாதம் 11ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை பீகாரில் நடைபெற உள்ளது.

இந்தியா முதல் ஆட்டத்தில் மலேசியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் ஹரியானா – தில்லி அணியையும், தெலுகு அணி – பட்னா அணியையும் வென்றன.

இன்று நடைபெறும் ஆட்டங்களில் பெங்கால் – புனேயையும், பெங்களூரு – தில்லியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<The End>>>>**